**27/03/2024**

**OS. No. 57/2022**

**பி.வா.சா.4. மணி**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் 4 வது சாட்சி. பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.5. நான் அஞ்சல் துறையில் பணிபுரிந்தற்கான என்னுடைய பணி அடையாள அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.6.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அஞ்சல் துறையில் பணிபுரிந்து 2018 ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. 1 ம் பிரதிவாதி ஸ்ரீராமன் என்னை அழைத்துவந்தார். ஸ்ரீராமன் சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததை சொல்கிறேன். நான் 1984 முதல் 1989 வரை திருமுக்கூடல் கிராமத்தில் பணிபுரிந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 1984 முதல் 1989 வரை திருமுக்கூடல் கிராமத்தில் பணிபுரியவில்லை என்றாலும் அதனால் தான் என்னுடைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபால் கொடுப்பதன் மூலம் வரதராஜனை எனக்கு நன்கு தெரியும் என்று பொய்யாக சாட்சியம்அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வரதராஜன் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது வரதராஜனும் சகோதரின் மனைவியின் தங்கையை திருமணம் செய்துக்கொண்டதாக வரதராஜன் என்னிடம் பேச்சுவாக்கில் சொன்னார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரதராஜன் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

வரதராஜனின் முதல் மனைவி கலா 1986 ல் இறந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கலாவின் இறப்பு சான்றிதழ் பாத்துள்ளேனா

என்றால் இல்லை. கலாவின் இறுதிசடங்கில் நான் கலந்துக்கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் வாதி வாரீசு சான்று கேட்டு வழக்கு போட்டுள்ளதாக 1ம் பிரதிவாதி என்னிடம் சொன்னார். 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.